சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.
முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,
சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்
2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆவணி மாதம் 10ஆம் நாள்
அசல் வழக்கு எண்.32/2025
[CNR.No.TNDG190000812025]

சிவராம் ... வாதி

/ எதிராக /

1. வேலாத்தாள்

2. ஜானகி

3. தேவி

4. பழனியம்மாள்

5. பெரியசாமி

6. உயர்திரு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அலுவலர், திண்டுக்கல் மாவட்டம்

7. உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள், திண்டுக்கல்

... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது கடந்த 12.02.2025ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 14.02.2025ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்னர் கடந்த14.08.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.T.விஜயக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 31.07.2025ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், 3ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தினால் கடந்த 04.11.2025ம் தேதி ஒருதலைபட்சநிலைக்குட்படுத்தப்பட்டும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.M.ரஞ்சித்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் அரசு வழக்குரைஞர் திரு.V.K.S.வேல்முருகன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்வழக்குரை தாக்கல்

செய்யாத காரணத்தினால் கடந்த 20.01.2026ம் தேதி ஒருதலைபட்ச நிலைக்குட்படுத்தப்பட்டும், வழக்குரை, எதிர்வழக்குரை, சாட்சியங்கள், சான்றாவணங்கள், வழக்குகோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், நாளது வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீ ர் ப் பு ரை

1. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம், கிரைய ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் மற்றும் செலவு தொகை வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தாக்கல் செய்த வழக்குரை சுருக்கம் :**

தாவா சொத்து இந்நீதிமன்ற ஆள்வரை அதிகார எல்லைக்குட்பட்ட ஒட்டன்சத்திரம் வட்டம், கீரனூர் கிராமத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்துக்களும், கூடுதல் விஸ்தீரணம் கொண்ட சொத்துக்களும் ஆதியில் பழனிச்சாமி கவுண்டர் மகன் கருப்பசாமி கவுண்டர் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். அவ்வாறு பாத்தியப்பட்ட சொத்துக்களை பழனிச்சாமி மகன் கருப்புச்சாமி கவுண்டர் பூர் வழியில் வாரிசுரிமைப்படி அடைந்து அனுபவம் செய்து வந்துள்ளார். பழனிச்சாமி மகன் கருப்புச்சாமி கவுண்டருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவியின் மூலம் கருப்புச்சாமி என்ற மகனும், 4ம் பிரதிவாதியான பழனியம்மாள் மற்றும் 5ம் பிரதிவாதியின் தாயார் கருப்பாயி அம்மாள் ஆகியோர்கள் வாரிசுகள் ஆவார்கள். பழனிச்சாமி மகன் கருப்புச்சாமி கவுண்டரின் இரண்டாவது மனைவி இவ்வழக்கு 1ம் பிரதிவாதி ஆவார். பழனிச்சாமி மகன் கருப்புச்சாமி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பிறந்த மகன் தான் இவ்வழக்கு வாதி. கருப்புச்சாமி கவுண்டர் முதல் மனைவி வழியாக பிறந்த கருப்புச்சாமியின் மகள்கள் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஆவார்கள். கொடிவழி ஜாபிதா இணைக்கப்பட்டுள்ளது. பழனிச்சாமி மகன் கருப்புச்சாமி அவர்களுக்கு பூர்வீக வழியிலும், பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தை கொண்டும், கருப்புச்சாமி பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்களையும் சேர்த்து 28.07.1993ம் தேதியில் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் பழனிச்சாமி மகன் கருப்புச்சாமி கவுண்டர், கருப்புச்சாமி கவுண்டரின் முதல் மனைவியின் மகன் கருப்புச்சாமி மற்றும் அப்போது மைனராக

இருந்த 2வது மனைவியான 1ம் பிரதிவாதியின் மகனான இந்த வாதிக்கு பழனிச்சாமி கவுண்டர் மகன் கருப்புச்சாமிகவுண்டர் தகப்பனும், கார்டியனுமாக இருந்து பாகப்பிரிவினை ஆவணம் எழுதிக்கொண்டுள்ளார்கள். அவ்வாறு 28.07.1993ம் தேதியில் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் பழனிச்சாமி மகன் கருப்புச்சாமி கவுண்டருக்கும், அப்போது மைனராக இருந்த வாதியின் பாகத்தையும் A செடியூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினையில் A செடியூலாக ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களில் வாதிக்கும், வாதியின் தந்தையான கருப்புச்சாமி கவுண்டருக்கும் சரிபாதி பங்கு பாகம் இருந்துள்ளது. A செடியூலில் கண்ட சொத்துக்களில் ஒரு பகுதி தான் தாவா சொத்துக்களாகும். பாகப்பிரிவினை ஆவணத்தில் B செடியூலில் கட்டுப்பட்ட சொத்துக்கள் 2, 3 பிரதிவாதிகளின் தந்தையான கருப்புச்சாமியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களாகும். 28.07.1993ம் தேதியில் செய்து கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள A செடியூல் சொத்துக்களில் பழனிச்சாமி மகன் கருப்புச்சாமிக்கு சரிபாதி பாகமும், வாதிக்கு சரிபாதி பாகமும் உள்ள நிலையில், வாதி மைனராக இருந்தபோது எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் 23.07.1996ம் தேதியில் காலமாகிவிட்டார். வாதி மேஜர் வயதை அடைந்து நாளது வரைதாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்து சம்பந்தமாக வங்கியில் கடன் பெறுவதற்காக வாதி வழக்கு சொத்திற்கான 30.01.2025ம் தேதி வில்லங்க சான்று பார்த்து ஆவணத்தின் நகல் பெற்றபோது தாவா சொத்துக்களில் எந்தவொரு பாத்தியமும் இல்லாத 1ம் பிரதிவாதியும், 2, 3 பிரதிவாதிகளின் தந்தையான கருப்புச்சாமி ஆகியோர்கள் சேர்ந்து 6, 7 பிரதிவாதிகளுக்கு ஒரு கிரைய ஆவணத்தை 29.12.1997ம் தேதியில் எழுதிக்கொடுத்துள்ளது வாதிக்கு தெரியவந்துள்ளது. 28.07.1993ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின்படி பழனிச்சாமி மகன் கருப்புச்சாமிக்கும், வாதிக்கும் பாத்தியப்பட்டு சொத்துக்கள் வாதியின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வருகிறது. தாவா சொத்திற்கு எந்த உரிமையும் இல்லாத கருப்புச்சாமி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த ஆவணம் நாளது வரை நடைமுறைக்கு வரவில்லை. கிரையம் கொடுத்த ஆவணத்தில் கிரையம் செய்து விட்டு எந்த வகையில் சொத்து பாத்தியம் என்பது தொடர்பாக எந்தவித விளக்கமும் இல்லாமல் ஆவணத்தை

உற்பத்தி செய்துள்ளார்கள். வாதிக்கும் வழக்கு சொத்தில் உள்ள உரிமைக்கு விரோதமாக 1ம் பிரதிவாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் ஆகியோர்கள் மோசடியாக 6, 7 பிரதிவாதிகள் பெயரில் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார்கள். கருப்புச்சாமியின் அனைத்து வாரிசுகளையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி மற்றும் கருப்புச்சாமி ஆகிய இருவரும் சேர்ந்து 6, 7 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் வாதி தரப்பினர் அல்ல. வாதிக்கு வில்லங்க சான்று பார்த்த 30.01.2025ம் தேதி தான் தெரியவந்ததால் தாவா காலவரையறையால் பாதிக்கப்படவில்லை. தாவா சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும், வாதி தாவா சொத்தினை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 1ம் பிரதிவாதியும், 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாரான கருப்புச்சாமி என்பவரும் சேர்ந்து வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தினை 6ம் பிரதிவாதிக்கு கடந்த 29.12.1997ம் தேதியில் எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணத்தில் வாதிக்குள்ள உரிமையை பொறுத்து செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியும் அசல் வழக்கானது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 5ம் பிரதிவாதி தாக்கல் செய்து 4ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :

எதிர்வழக்குரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர். கருப்புச்சாமி கவுண்டர் காலத்திலேயே தாவா சொத்துக்கள் பிரிவினை செய்யப்பட்டு, அவரவர் பாகங்களுக்கு ஒதுக்கப்பட்டு, தனித்தனியாக அனுபவித்து வரப்பட்டது. 5ம் பிரதிவாதியின் தாயாரை ஓடைப்பட்டிக்கு திருமணம் செய்து கொடுத்து அங்கேயே வாழ்ந்து வந்தார். 4ம் பிரதிவாதியை நீலாங்காளிவலசு என்ற ஊரில்திருமணம் செய்து கொடுத்து அவரும் அவரது ஊரில் வசித்து வருகிறார். தாவா சொத்துக்களை பற்றி எங்களுக்கு எந்த விபரமும் தெரியாது. கடந்த 1923ம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டு அதன்படி சொத்துக்கள் அனுபவித்து வரப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களில் 1ம் பிரதிவாதியின் மகனான இவ்வழக்கு வாதி சிவராம் என்பவர் அனுபவம் மற்றும்

சுவாதீனத்தில் இருந்து வருகிறார். கருப்புச்சாமி தனக்கு பாகமாக கிடைத்த சொத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அரசுக்கு கடந்த 1997ம் ஆண்டு கிரையமாக கொடுத்துள்ளார். அந்த நிலங்கள் இன்று வரை யாரும் பயன்படுத்தாமல் தரிசு நிலமாக உள்ளது. தாவா சொத்துக்களை பொறுத்து வாதி கேட்டுள்ள பரிகாரங்களை வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கடந்த 20.02.2026ஆம் தேதி கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

2. தாவா சொத்துக்களை பொறுத்து வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

3. கடந்த 29.12.1997ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட 6ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லாது என்று வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

4. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

5. வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்தும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் எதுவும் முன்னிலைப்படுத்தாத நிலையில் வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

6. கடந்த 29.12.1997ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் காலவரையறையால் பாதிக்கப்படுகிறதா ? என்பதை பொறுத்து எழுவினாக்கள் எதுவும் வனையப்படவில்லை. எனவே, உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம், கட்டளை 14 விதி 5ன் நோக்கெல்லைக்குட்பட்டு கீழ்கண்டவாறு எழுவினாக்கள் திருத்தம் செய்து மாற்றி வனையப்படுகிறது.

திருத்தம் செய்து மாற்றி வனையப்பட்ட எழுவினாக்கள் நாள் : 27.08.2026

1. அசல் வழக்கு உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பாதிக்கப்படுகிறதா?

2. தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

3. தாவா சொத்துக்களை பொறுத்து வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

4. கடந்த 29.12.1997ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட 6ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லாது என்று வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

5. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

7. அசல் வழக்குரையில் காலவரையறை பற்றியும், வா.சா.1 என்பவர் அளித்த சாட்சியத்தில் காலவரையறை பற்றியும் போதுமான சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தியிருப்பதால், புதியதாக வனையப்பட்ட காலவரையறையை குறித்த சாட்சியம் முன்னிலைப்படுத்த விசாரணை வாய்ப்பை தவிர்த்து இன்று தீர்ப்புரை பகரப்படுகிறது.

8. பிரச்சனைக்கான தீர்வுகள்:

1. எழுவினா–1க்கான தீர்வு : அசல் வழக்கு உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் பாதிக்கப்படுகிறதா?

1.1. தாவா சொத்துக்கள் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்று விளம்புகை பரிகாரம்கோரியும், தாவா சொத்தினை வாதி அனுபவித்து வருவதாகவும், அதை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வாதியின் தாயாரான 1ம் பிரதிவாதி மற்றும் கருப்புச்சாமி கவுண்டர் மகன் கருப்புச்சாமி ஆகியோர்கள் சேர்ந்து வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை 6ம் பிரதிவாதிக்கு 29.12.1997ம் தேதியில் சொத்தினை விற்பனை செய்து கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டதாகவும், வாதியின் உரிமையை பொறுத்து கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் வாதி தரப்பில் வழக்கானது முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது.

1.2. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதியின் தகப்பனார் கருப்புச்சாமி கவுண்டர் தனக்காகவும், தனது மகனான சுமார் 3 வயதுள்ள சிவராமன் என்பவருக்கு தகப்பனாராகவும், பாதுகாவலராகவும் இருந்தும், தனது முதல் மனைவியின் மகனான கருப்புச்சாமி என்பவருடன் சேர்ந்து தாவா சொத்துக்களையும், இதர சொத்துக்களையும் கடந்த 28.06.1993ம்தேதியில் பாகப்பிரிவினை செய்துள்ளார்கள். மேற்படி பாகப்பிரிவினையில், பாகப்பிரிவினை ஏற்பட்டபோது மைனராக இருந்த தனது 3 வயது மைனர் மகனான வாதிக்கு தகப்பனாராகவும், பாதுகாவலராகவும் இருந்தும், தனக்காக வேண்டியும், பாகப்பிரிவினையில் A செடியூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது.

1.3. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, கடந்த 29.12.1997ம் தேதி தாவா சொத்தினை வாதியின் தாயாரான 1ம் பிரதிவாதியும், கருப்புச்சாமி கவுண்டர் மகன் கருப்புச்சாமி என்பவரும் சேர்ந்து சொத்தினை 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து தொகை ரூ.4,27,000/- பெற்றுள்ளது வா.சா.ஆ.3 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது.

1.4. வா.சா.ஆ.2 ஆவணமான பாகப்பிரிவினை பத்திரத்தில் வாதியாகிய தனக்கும், தனது தகப்பனாருக்கும் கூட்டாக ஒதுக்கப்பட்ட A செடியூல் சொத்தில் தனக்கு சரிபாதி பாகம் பாத்தியம் உள்ளது என்றும், எவ்வித பாத்தியம் இல்லாத தனது தாயார் வா.சா.ஆ.3 ஆவணத்தின் வழியாக கடந்த 29.12.1997ம் தேதியில் விற்பனை செய்துள்ளது தவறு என்றும், மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என விளம்புகை கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி வழக்கானது உரிய காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா ? என்று பரிசீலனை செய்து பார்க்கும்போது, கடந்த 1993ம் ஆண்டு இவ்வழக்கு வாதிக்கு சுமார் 3 வயது என்பது வா.சா.ஆ.2 ஆவணத்தின் வழியாக அறிய முடிகிறது. எனவே, இந்த வாதி கடந்த 1990ம் ஆண்டு வாக்கில் பிறந்திருக்க வேண்டும். வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதியில் தனக்கு வயது சுமார் 35 என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, வாதி கடந்த 2009ம் ஆண்டு 18 வயது முடிவடைந்து உரிய வயதை அடைந்திருக்க

வேண்டும். தனக்கு சொத்துக்களில் இளவராக இருந்தபோது பாத்தியம் உள்ளது என்று தனது உரிமையை கோருகிற வாதி இளவர் நிலை நீங்கியவுடன் 3 ஆண்டு காலத்திற்குள் காலவரையறை சட்டம், 1963 பிரிவு 60ன் படி வழக்கினை தாக்கல் செய்திருக்க வேண்டும். இவ்வழக்கை பொறுத்து வா.சா.ஆ.3 ஆவணமானது கடந்த 29.12.1997ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை கடந்த 12.02.2025ம் தேதி வழக்கு தாக்கல் செய்து ரத்து செய்ய வேண்டும் என்று கோரியும், 30.01.2025ம் தேதியில் வில்லங்க சான்று பார்த்தபோது தான் தனக்கு தெரியவந்ததாகவும் வாதி தரப்பில் வழக்கானது முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை எவ்வித தகுநிலை ஐயப்பாட்டிற்கும் இடமின்றி நிரூபிக்க வேண்டியது வாதியின் கடமையாகும். வாதி வழக்குரையில் சொல்லியுள்ள கூற்றின்படி வில்லங்கசான்று கடந்த 30.01.2025ம் தேதி பார்த்திருக்கும்பட்சத்தில் அந்த வில்லங்க சான்றினை இவ்வழக்கிற்கு ஆதரவாக தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யாத நிலையில், வழக்குரை சங்கதிகளில் வாதி சொல்லியுள்ள கூற்றினை பொறுத்து வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை என்றே கருத இயலும். அசல் வழக்கை பொறுத்து வா.சா.ஆ.3 ஆவணத்தை செல்லாத ஆவணம் என்று பரிகாரம் கோரியுள்ள நிலையில், வாதி உரிய வயதை அடைந்தவுடன் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட உரிய காலவரையறையான மூன்று ஆண்டு காலக்கெடுவிற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதை அறிய முடிகிறது. எனவே, அசல் வழக்கானது காலவரையறையால் பாதிக்கப்படுகிறது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

2. எழுவினா 2க்கான தீர்வு : தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

2.1. தாவா சொத்துக்களை பொறுத்து வாதிக்கு வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டுள்ள A செடியூல் சொத்துக்களில் தனது தகப்பனார் கருப்புச்சாமிக்கு 1/2 பாகமும், தனக்கு 1/2பாகமும் பாத்தியம் உள்ளதாகவும், தனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எவ்வித பாத்தியமும் இல்லாத நிலையில், கருப்புச்சாமி கவுண்டர் மகன் கருப்புச்சாமி மற்றும் தனது தாயார் வேலாத்தாள் ஆகியோர்கள் விற்பனை செய்து விட்டதாகவும் வாதி தரப்பில் வழக்கானது முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது.

2.2. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணமான 28.06.1993ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் A செடியூல் சொத்துக்களாக ஒட்டன்சத்திரம் சப்ரிடி, கொண்டரங்கி கீரனூர் கிராமத்தில், கீழ்கண்ட சொத்துக்கள் பழனிச்சாமி கவுண்டர் மகன் கருப்புச்சாமி மற்றும் வாதி சிவராம் ஆகியோர்களுக்கு கூட்டாக பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	சர்வே எண்.	விஸ்தீரணம்
1	524/1	ஏக்கர் 0 சென்ட் 64,
2	543/4C	ஏக்கர் 0 சென்ட் 36,
3	527/1	ஏக்கர் 0 சென்ட் 56
4	526/1B	ஏக்கர் 0 சென்ட் 16,
5	524/2A	ஏக்கர் 2 சென்ட் 93,
6	527/2A	ஏக்கர் 5 சென்ட் 74,
7	524/3	ஏக்கர் 0 சென்ட் 19,
8	407/1	ஏக்கர் 1 சென்ட் 69,
9	407/2	ஏக்கர் 1 சென்ட் 73,
10	407/3	ஏக்கர் 1 சென்ட் 28,
	ஆக மொத்தம்	ஏக்கர் 15 சென்ட் 28.
11	404/1	ஏக்கர் 2 சென்ட் 45,
12	404/2	ஏக்கர் 1 சென்ட் 15,
13	404/3	ஏக்கர் 3 சென்ட் 35
	ஆக மொத்தம்	ஏக்கர் 6 சென்ட் 95 இதில், ஏக்கர் 2 சென்ட் 40

மற்றும் சர்வே எண்.527/2Aல் உள்ள கிணறு மற்றும் சமஸ்த பாத்தியங்களும், நத்தம் வீட்டு மனையிடங்களும் A செடியூலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

2.3. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளில் கடந்த 29.07.1996ம்தேதியில் வாதியின் தகப்பனாரான கருப்புச்சாமி கவுண்டர் (த.பெ.பழனிச்சாமிகவுண்டர்) எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதாகவும், தனது தாயாரான 1ம்பிரதிவாதி வேலாத்தாளுக்கு எவ்வித

உரிமையும் இல்லை என்றும், நாளது வரை தாவா சொத்தின் அனுபவமானது வாதி வசம் உள்ளதாகவும், வாதி தரப்பில் வழக்கானது முன்னெடுத்து செல்லப்பட்டுள்ளது. இந்து வாரிசுரிமை சட்டம், 1956 பிரிவு 3(f)ல் வாரிசு என்பது ஆவணங்கள் எழுதி வைக்காமல் இறந்தவரின் சொத்தை அடைவதற்கு உரிமை உடைய ஆணாக உள்ள அல்லது பெண்ணாக உள்ள யாதொரு நபர் என்று பொருள்படும் என்றும் வரையறை உள்ளது. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள சரத்துக்களின் தன்மைப்படி, பூர்வீக வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்களையும், பூர்வீக வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை கொண்டும் கிரையம் பெற்ற சொத்துக்களையும், ஒன்றாக சேர்த்து பாகப்பிரிவினை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு பாகப்பிரிவினை மேற்கொள்ளப்பட்டபோது பழனிச்சாமி கவுண்டர் மகன் கருப்புச்சாமி தனக்கும், தனது மைனர் மகனுக்காகவும் ஒரு தரப்பினராக இருந்தும், A செடியூல் சொத்துக்களை பொறுத்து தனக்கும், தனது மைனர் மகனுக்கும் சேர்ந்து பாகப்பிரிவினை ஏற்படுத்தியுள்ளார். எனவே, இறந்து போன கருப்புச்சாமி என்பவருக்கு 28.06.1993ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள A செடியூல் சொத்துக்களில் சரிபாதி பாகமும், வாதி சிவராமனுக்கு சரிபாதி பாகமும் உள்ளது. கருப்புச்சாமி இறந்துள்ள நிலையில் அவரது மனைவியான வேலாத்தாள் என்பவரும் இறந்துபோன கருப்புச்சாமிக்கு இந்து வாரிசுரிமை சட்டம், 1956 பிரிவு 8 அட்டவணை 1ன் கீழாக வாரிசாக வருவார். கடந்த 29.12.1997ம் தேதியில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் நாச்சிமுத்து அவருக்கு பாகப்பிரிவினையில் வந்த சொத்தினை தனியாக சொத்து விபரம் கண்டும், பழனிச்சாமி கவுண்டர் மகன் கருப்புச்சாமியின் மனைவி 1ம்பிரதிவாதி குறிப்பிட்ட சர்வே எண்களான 404/1, 404/2, 404/3 ஆகிய புலங்களில் உள்ள விஸ்தீரணம் ஏக்கர் 2 சென்ட் 40 பூமிகளை மட்டுமே விற்பனை செய்துள்ளார். பாகப்பிரிவினை பத்திரத்தில் Aசெடியூலில் கண்டுள்ள மற்ற சொத்துக்கள் என்ன ஆனது என்பது பற்றியும், தரப்பினர்களுக்குள் A செடியூலின் மற்ற சொத்துக்களை பற்றி என்ன ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டது என்பது பற்றியும் வாதி வழக்குரை சங்கதிகளில் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் பழனிச்சாமிகவுண்டர் மகன் கருப்புச்சாமி கவுண்டர் மற்றும் வாதி (மைனராக இருந்தபோது) விவசாய பூமி ஏக்கர் 17 சென்ட் 68 நிலம் மற்றும் கிணறு சமஸ்த

பாத்தியங்கள், நத்தம் வீட்டு மனை இடங்கள் ஆகியவைகள் ஒதுக்கப்பட்டுள்ளதில், வாதியின் தாயாரான 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தான ஏக்கர் 2 சென்ட் 40 விஸ்தீரணமுள்ள சொத்தினை மட்டுமே விற்பனை செய்துள்ளார். மீதமுள்ள சொத்துக்களான ஏக்கர் 15 சென்ட் 28 நிலமானது தற்போது என்ன நிலையில் உள்ளது என்பதை வாதி வழக்குரை சங்கதிகளில் குறிப்பிடவில்லை. மேலும், அதற்கான ஆவணங்களையும் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தவில்லை. வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் சொத்துக்கள் தனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை சொல்லாத காரணத்தினால் மட்டுமே தவறாக கிரைய ஆவணம் ஏற்படுத்திவிட்டதாக கருத இயலாது. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதியை சார்ந்ததாகும். வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தின் வழியாக 1ம் பிரதிவாதி விற்பனை செய்த சொத்துக்கள் போக மீதமுள்ள, அதாவது, வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை பத்திரத்தில் A செடியூல் சொத்துக்களில் கண்டுள்ள மற்ற சொத்துக்களின் நிலைப்பாட்டினை தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வழியாக வாதி நிரூபிக்காதநிலையில், 1ம் பிரதிவாதி தனது பாக சொத்துக்களை மட்டுமே வா.சா.ஆ.3 வழியாக விற்பனை செய்துள்ளதால், மேற்படி வா.சா.ஆ.3 ஆவணமானது தகுந்த மறுபயனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும், சரியாக கிரையம் செய்யப்பட்ட ஆவணம் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. ஒரு சொத்தினை பற்றி ஒரு நபருக்கு முழுமையாக, சரியான ஆவணங்கள் வழியாக உரிமை பாத்தியம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் மட்டுமே விளம்புகை பரிகாரம் கோர இயலும். இவ்வழக்கில் கண்டுள்ள தாவா சொத்துக்களை பொறுத்து வா.சா.ஆ.3 ஆவணத்தின் வழியாக சரியான முறையில் உரிமை மாற்றம் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலையில், வாதி கோரக்கூடிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

3. எழுவினா 3க்கான தீர்வு : தாவா சொத்துக்களை பொறுத்து வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

தாவா சொத்தானது வாதியின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளதாக வாதி வழக்கை முன்னெடுத்து சென்றுள்ள நிலையில், அனுபவம் மற்றும் சுவாதீனத்தை நிரூபிக்க எந்த ஒரு ஆவணமும் முன்வைக்கவில்லை. மேலும், வாதி

தரப்பில் வா.சா.ஆ.4 ஆவணமான பட்டா எண்.30, சர்வே எண்.404/1 முதல் 404/3 வரையிலான சர்வே எண்களுக்குரிய கணினி சிட்டாவாகும். மேற்படி கணினி சிட்டாவில் 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் கருப்புச்சாமி பெயர் மட்டுமே இடம் பெற்றுள்ளது. தாவா சொத்து வாதியின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருப்பதற்கு ஆதரவாக வேறு எந்த ஒரு வருவாய்துறை ஆவணமும் வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. ஒரு சொத்திற்கு உரிய ஆவணங்கள் வழியாக அனுபவம் மற்றும் சுவாதீனம் ஏற்பட்டிருக்க வேண்டும். தாவா சொத்தை பொறுத்து 6ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி சொத்துக்களை விற்பனை செய்துள்ள நிலையில், வாதிக்கோரக்கூடிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

4. எழுவினா 4க்கான தீர்வு : கடந்த 29.12.1997ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட 6ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லாது என்று வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

மேலே கண்ட எழுவினாவில் கடந்த 29.12.1997ம் தேதியில் 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணம் தகுந்த மறுபயனுக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணம் என்றும், வா.சா.ஆ.2 ஆவணமான பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள A செடியூல் சொத்தில் பழனிச்சாமிகவுண்டர் மகன் கருப்புச்சாமி கவுண்டர் என்பவர் எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் இறந்துள்ள நிலையில், 1ம் பிரதிவாதி கருப்புச்சாமி கவுண்டரின் மனைவி என்ற முறையில், இந்து வாரிசுரிமை சட்டம், 1956 பிரிவு 8 அட்டவணை 1ல் கண்டுள்ளவாறு மனைவி என்ற முறையில் வாரிசாக வரக்கூடிய நிலையில், 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.2 ஆவணத்தில் A செடியூலில்கண்டுள்ள ஒரு பகுதி சொத்தினை மட்டுமே 6ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளதாலும், மேற்படி வா.சா.ஆ.3 கிரைய ஆவணமானது தகுந்த மறுபயனுக்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று உள்ள நிலையிலும், வாதியின் பாகத்தை சேர்த்து 1ம் பிரதிவாதி விற்பனை செய்யவில்லை என்பதாலும், வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் செல்லாது என்று வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

5. எழுவினா 5க்கான தீர்வு வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரங்கள், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று தீர்மானித்துள்ள நிலையில், இதர பரிகாரங்கள் எதுவும் வழங்க வேண்டியதில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு செலவு தொகை பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

6. முடிவில்,

வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம், 29.12.1997ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை பொறுத்து செல்லாது என்று வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று வாதியின் வழக்கு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.27 13:20:08 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்

வாதி தரப்பு சாட்சிகள் :

வா.சா.1 – சிவராம் – வாதி

வாதி தரப்பு சான்றாவணங்கள்:

1	–	கொடிவழி ஜாபிதா	வா.சா.ஆ.1
2	28.06.1993	பாகப்பிரிவினை ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல்	வா.சா.ஆ.2

3	29.12.1997	6ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதியும், 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாரான கருப்புச்சாமியும் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல்	வா.சா.ஆ.3
4	30.01.2025	பட்டா எண்.30 சர்வே எண்.404/1 முதல் 404/3 வரையிலான புலங்களுக்குண்டான கணினி சிட்டா – கணிணி பதிவிறக்க நகல்	வா.சா.ஆ.4
5	30.01.2025	சர்வே எண்.404க்கான புல வரைபடம் – கணினி பதிவிறக்க நகல்	வா.சா.ஆ.5

பிரதிவாதிகள் தரப்பு சாட்சி : இல்லை
பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.08.27 13:20:14 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்.